பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 11 வியாழக்கிழமை 27.11.2025 கதிர் 019


### இனி இது ரகசியம் அல்ல!

போதைப்பொருள்வர்த்தம்மற்றும் லஞ்ச ஊழல் மூலம் வருமானத்தை மீறிச் சேர்க்கப்பட்ட சொத்துக்களை அரசே கையகப்படுத்துவதற்கான சட்டம் அண்மையில் ☞2

# தலைவர் பிரபாகரனைத் தூக்கிப் பிடிக்காமல் ஜேவிபியினால் அரசியல் செய்ய முடியாது

## வடக்கு – கிழக்கின் நிலை இதுதான் என்கிறார் கஜேந்திரகுமார்

உலக தமிழருடைய தலைவரே பிரபாகரன். அவரையோ அல்லது அவருக்கு கீழ் இயங்கிய போராளிகளையோ தூக்கி பிடிக்காமல் ஜேவிபி வடக்கு கிழக்கில் அரசியல் செய்ய முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைக்கு உலகத்தமிழருடைய தலைவராக இருக்கக்கூடிய தலைவர் பிரபாகரனுடைய 71ஆவது ஆண்டு பிறந்த தினமாகும். அத்தகைய தேசிய தலைவருடைய ☞2

# கடும் மழையால் நெடுங்கேணியில் வைத்தியசாலைப் பணிகள் பாதிப்பு

நெடுங்கேணியில் கடும் மழை, வெள்ளம் காரணமாக வைத்தியசாலைசெயற்பாடுகள்கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் அவசர சிகிச்சை தவிர்ந்த ஏனைய செயறாபாடுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமாலைபெய்தகடும்மழைகாரணமாகநெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதையடுத்து மருத்துவமனையின் சேவைகள் தற்காலிகமாகக் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவசர சேவைகள் மாத்திரமே ☞2

# மாவீரர்களை நினைவேந்த தமிழர் தாயகம் பேரெழுச்சி

## இன்று மாலை 6.05 மணிக்கு விளக்கேற்றல்



**ஈழத் தமிழர்களின் உரிமைக்காக-தமிழீழம்என்கிற தனிநாட்டு இலட்சியத்துக்காக - தமது இறுதி மூச்சு வரைப் போராடி வீரச் சாவினைத் தழுவிய வீரமறவர்களான மாவீரர்களுக்குத் தமிழினம் இன்று தனது அஞ்சலியைச் செலுத்தும் விதத்தில் வடக்கு மாகாணம் பேரெழுச்சியுடன் தயாராகியுள்ளது. வீதிகளின் முக்கிய சந்திகள், நகரங்கள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கொண்டு அலங்கிக்கப்பட்டு தற்காலிகள மாவீரர் நினைவிடங்கள் ஏற்படுத்தப்பட்டு இன்றைய மாவீர் தின அஞ்சலிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.**

**இன்று மாலை 6.05 மணிக்குத் தாயகம் மெங்கிலும் சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்குஅஞ்சலிசெலுத்தப்படும்.**

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் முதற் களப்பலியான லெப். சங்கர் ☞2**

# மீனவர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன

## அமைச்சர் சந்திரசேகரன் இப்படித் தெரிவிப்பு

இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அவர்களை நாம் நிச்சயம் பாதுகாப்போம். அதேபோல கடல்வளங்களை பாதுகாப்பதற்கும், ஏற்றுமதியை நோக்கி நகர்வதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத்திட்டத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடல்வளம் மற்றும் மீன்பிடித்துறை எவ்வாறு மேம்படுத்தப்படும் என எமது விஞ்ஞாபனத்தில் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்றொழில் விடயத்தில் நாம் இன்னமும் பழமையான நிலையிலேயே உள்ளோம் என்பதை ஏற்றாக வேண்டும். ஆழ்கடல் உட்பட மீன்பிடியில் ஈடுபடும் படகுகள் குறைந்தது 10 வருடங்களாவது பழைய நிலையில் உள்ளன. இதனால் ஆழ்கடல் மீன்பிடி தொடர்பில் நம்பிக்கை குறைந்து வருகின்றது. நவீன படகுகள் பற்றியும் கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனால் மீன்பிடித்துறை வலுவிழந்து வரும் நிலையும் காணப்படுகின்றது.

இந்தநிலமையில்இருந்துநாம்மேம்படவேண்டும், எமது மீனவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு உறுதியாக உள்ளது. 2025 வரவு- செலவுத் திட்டத்தில் எமது அமைச்சுக்கு 11.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவுக்குக் கூடுதல் ஒதுக்கீடு கிடைத்துள்ளது. ☞2

# டிஜிட்டல் பொருளாதார திட்டத்தில் தமிழ், சிங்கள மொழிகள் புறக்கணிப்பு

## ஹர்ஷா எம்.பி. சுட்டிக்காட்டு

டிஜிட்டல் பொருளாதார கருத்திட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் சிங்கள மக்கள் தமது தாய்மொழியுடன் டிஜிட்டல் கருத்திட்டத்துக்குள் உள்நுழையும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ☞2

# ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில்தான் மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

## பிரதி அமைச்சர் ரத்ன கமகே குற்றச்சாட்டு

ராஜபக்ச ஆட்சிகாலத்தில்தான் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இவற்றை மறந்து தற்போது மீன்பிடித்துறை பற்றி கதைக்கின்றனர் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தில் கடற்றொழில் , நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக நிற்கும் மூன்று துறைகளில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் ☞2

# தேசியத் தலைவர் பிரபாவிற்கு நேற்று நல்லூரில் பிறந்தநாள் கொண்டாட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரானதேசியத்தலைவர்பிரபாகரனின் 71ஆவது பிறந்த தினம் நேற்று நல்லூரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக மாவீரர்களின் பெயர்பொறிக்கப்பட்டகல்வெட்டுஅமைந்துள்ள நினைவாலயத்தின் முன்பாக இந்தக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

பிறந்த நாளையொட்டிப் பெரிய பானையில் பொங்கல் பொங்கி மக்களுக்குப் பரிமாறப்பட்டது, அத்தோடு கேக், இனிப்பு மற்றும்மரக்கான்றுகள்உள்ளிட்டவையும்மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



# ஜேவிபி பொது செயலர் ரில்வின் போன்று எதிரிகளை அழிப்பது சு.கவின் இலக்கல்ல

## அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த இடித்துரைப்பு

ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவைப் போன்று எதிரிகளை அழிக்க வேண்டும் என்பது எமது இலக்கு அல்ல என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசுத் தலைவர் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில், போதைப் பொருள் வர்த்தகர்களுடையவை என்றுகருதப்பட்டுஏற்கனவேமுடக்கப்பட்டிருந்த சொத்துக்கள்பலவும்அரசுடைமையாக்கப்பட்டன. அது தவிர இத்தகைய சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளும்தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு (ஷீபுணூம்), தெற்கு மாகாணத்தில் நேற்றுச் சில சொத்துக்களைக் கைப்பற்றி அவற்றை அரசுடைமையாக்குவதற்கானநடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடுமையான குற்றங்களில் ஈடுபட்டு பணம் ஈட்டிய பின்னர் வெளிநாட்டில் மறைந்திருக்கிறார் என்று கூறப்படும் மத்துமகே ஷெஹான் சத்சாரா எனப்படும் தெஹிபலே மல்லிக்குச் சொந்துக்களே கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று முடக்கப்பட்ட அந்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ. 250 மில்லியனுக்கும் அதிகம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவின்உதவிஇயக்குநர்,உதவிகாவல்கண்காணிப்பாளர் ஜனக பிரியதர்ஷன விதானகே மற்றும் பிற அதிகாரிகள் நீண்டகாலமாக மேற்கொண்ட விசாரணையின் விளைவாக இந்த சொத்துக்கள் முடக்கப்பட்டிருக்கின்றனவாம்.

திக்வெல்ல பிரதேச செயலகத்திற்கு அருகிலுள்ள சுமார் 50 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வீடு மற்றும் நிலம், அத்துடன் 200 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஐந்து மீன்பிடி இழுவை படகுகள் (மெலினா 01 / மெலினா 02 / மெலினா 03 / மெலினா 04 / மெலினா 05) ஆகியவையே கைப்பற்றப்பட்டு முடக்கப்பட்டுள்ளன. டிக்வெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தபோது இழுவைப் படகுகள் நேற்றுப் பறிமுதல் செய்யப்பட்டன.

போதைப்பொருள்வர்த்தகர்களுக்குஎதிராக, அதிலும்வெளிநாடுகளில்மறைந்திருக்கிறார்கள் என்று கூறப்படும் நபர்களின் சொத்துக்களை முடக்கி அரசுடைமையாக்குவதில் ஆளும்தரப்பு தீவிரம் காட்டினாலும் கடந்த காலங்களில் ஊழல் மோசடி மூலம் மக்களின் பணத்தைக் கொள்ளையடித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு அரசியல்வாதியின் சொத்தும் இதுவரையில் முடக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. அது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர் என்றபோதும், உடனடியாக எவரது சொத்துக்களையும் முடக்குமளவிற்கு விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அரசியல்வாதிகள் ஊழல்வாதிகள், ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கள்வர்கள் என்று கூறித்தான் ஆட்சிக்கு வந்தது தேசிய மக்கள் சக்திஆளும்தரப்பு,இதுவரையில்பொதுநிதியை வீணடித்தார்கள்என்றகுற்றச்சாட்டில்முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்படச் சில அசியல்வாதிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல்செய்ததோடுசரி. அரசியல்வாதி ஒருவரினது சொத்து எனக் கூறப்பட்டபோதும் எவராலும் உரிமை கோரப்படாத சொத்து ஒன்றை முடக்கியதற்கு அப்பால் ஊழல் பணத்தில் வருமானத்தை மீறி பெறப்பட்ட அரசியல்வாதிகளின் சொத்துக்கள் என்று எவற்றையும்இதுவரையில்கைப்பற்றவில்லை.

அரசியல்வாதிகள்தான் மக்கள் பணத்தை பல நூறு கோடிகள் ஆயிரம் கோடிகள் என்று ஆட்டையைப் போட்டு முழுங்கினார்கள் என்று ஜேவிபி உள்ளிட்ட ஆளும்தரப்பினர் கடந்த காலங்களில் மிகப் பெருமளவில் குற்றஞ்சாட்டினர். இன்றைய அரசுத் தலைவர் முன்னர் நாடாளுமன்றத்திற்கு வரும்போதெல்லாம் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடங்கிய 'பைல்' கட்டோடுதான் அடிக்கடி நாடாளுமன்றம் வருவார்என்றுநாடாளுமன்றச்செய்தியாளர்கள் நினைவுபடுத்துகிறார்கள். அப்படியிருந்தும் எந்தவொரு பெரிய ஊழல் மூலமும் சேர்க்கப்பட்ட சட்டவிரோதச் சொத்து என்று எதனையும் ஆளும்தரப்பால் இதுவரையில் முடக்கமுடியாமல் போயிருப்பது பெரும் பின்னடைவுதான்.

போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களின் சொத்துக்கள் இதுபோன்று பல நூறுகோடிகளில்இருப்பதாகத்தெரியவில்லை. அல்லது அத்தகைய சொத்துக்களும்கூட அரசியல்வாதிகளிடம்தான் மறைந்திருக்கவேண்டும். ஆக மொத்தத்தில் குற்றக் கும்பல்களிடமிருந்து மீட்கப்படும் சில கோடி ரூபாய்களைக் கொண்டு தேசிய மக்கள் சக்தி பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்றால் அதுதான் ஆசியாவின் அதிசயமாக இருக்கக்கூடும்.

பொறுத்திருந்து பார்ப்போம், இன்னும் 4 வருடங்களுக்குள் ஒரு அரசியல்வாதியிடமிருந்தாவது பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களைப் பறிமுதல் செய்கிறார்களா என்று..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாவீரர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரச் சாவடைந்த 1982ஆம் ஆண்டு நவம்பர் 27 மாலை 6.05 மணியே மாவீரர் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய மாவீரர் நாளுக்காக வடக்கு, கிழக்குப் பகுதிகள் எங்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளுக்காகத்தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. துயிலும்இல்லங்களில்மாவீரர்தினத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நேற்று மாலையே பூர்த்தியாகியுள்ளன. துயிலும் இல்லங்களைச் சூழச் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு நடுவில் கொடிக் கம்பம் நடப்பட்டுள்ளது.

துயிலும் இல்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு நினைவுச் சுடர் ஏற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மழைக்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் உரிய நேரத்தில் வருகை தந்து அஞ்சலியில் கலந்துகொள்ளுமாறு மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்தாளர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கில் கனமழை பெய்துவரும் நிலையில் அங்கும் துயிலும் இல்லங்களில் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புயல் மழை இல்லாத நிலையில், திட்டமிட்டபடி நினைவேந்தல் நிகழ்வுகள் துயிலும் இல்லங்களில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேவிபி பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமாரவிற்குவலியுறுத்தவேநுகேகொடை பேரணிநடத்தப்பட்டதேதவிர ஆளும்தரப்பைக் கவிழ்க்க வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுகேகொடை கூட்டம் தொடர்பில் பல சர்ச்சைக்குரிய விடயங்கள் பேசப்படுகின்றன. நாம் மிகவும் தெளிவாக ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம். சுதந்திரக் கட்சி என்ற ரீதியில், நாம் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக உறுதியாக நிற்போம். ஏனென்றால், இந்த நாட்டில் ஒரு கட்சி அரசியல் அல்ல, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்த ஒரு அரசியல் இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆளும்தரப்பால் ஏமாற்றப்பட்டவர்களே நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்றனர். இப்போதாவது ஆளும்தரப்பின் பொய்களை அறிந்து உண்மையை உணரத் தயாரானதற்காக அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். டிசெம்பர் 6 அநுராதபுரத்தில் ஒரு முக்கிய கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். அனைவரையும் அந்த கூட்டத்திலும் பங்கேற்குமாறு அழைப்பு விடுகின்றோம்.

ஆளும்தரப்பைக் கவிழ்க்கவேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. எனவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அசுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை வலியுறுத்துகின்றோம். நாம் இந்நாட்டின் ஜனநாயக ஜனநாயக அரசியல் கட்சிகள் என்ற வகையில், நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக என்றும் போராடுவோம்.

மாறாக டில்வின் சில்வா கூறுவதைப் போன்று எதிரிகளைப் பழிவாங்குவது எமது நோக்கமல்ல. ரில்வினுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் ஒன்றைக் கூற விரும்புகின்றோம். நீங்கள் எம்மை எதிரிகள் என்று நினைத்தால், அதற்காகச் செய்யக்கூடிய மிக உயர்ந்த விடயங்களைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். பொய்களை நம்பி ஏமாந்ததுபோதும். இனியாவது தாய்வீட்டுடன் கைகோர்த்து நாட்டுக்காக பயணிப்பதற்கு சுதந்திர கட்சியினருக்கு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

## டிஜிட்டல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார்.

நாடாமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,டிஜிட்டல் பொருளாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

டிஜிட்டல்பொருளாதாரம்நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிர்வாக கட்டமைப்பில் டிஜிட்டல் மயப்படுத்தலை செயற்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். டிஜிட்டல் மயமாக்கலின் போது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும்.

ஒருசில நாடுகள் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை புறக்கணித்து டிஜிட்டல் மயமாக்கலை செயற்படுத்த முனைந்த போது பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.ஆகவே நாட்டில் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு அமைவாகவே டிஜிட்டல் பொருளாதார திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

இந்த நாட்டில் 30 வருடகால போர் காணப்பட்டது. போர் முடிவடைந்துள்ள நிலையில் இன்றளவிலும் நல்லிணக்கம் மற்றும் அமைதி உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டிஜிட்டல் மயமாக்கலை அமுல்படுத்த புதிய திட்டங்கள் ஏதும் செயற்படுத்தப்படவில்லை.

டிஜிட்டல் பொருளாதார கருத்திட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அரச நிர்வாக கட்டமைப்பில் ஏதேனும் வலைத்தளங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள டிஜிட்டல் பொருளாதார கருத்திட்டத்தில் இச்சட்டம் மீறப்பட்டுள்ளது.தமிழ் மற்றும் சிங்கள மக்கள் தமது தாய்மொழியுடன் இந்த கருத்திட்டத்துக்குள் உள்நுழையும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை பற்றி பேசப்படுகிறது. ஆனால் இதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படையாக் குறிப்பிடப்படவில்லை. ஆகவே இந்த கருத்திட்டம் தொடர்பில் ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்திக்காக மேலும் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தை கையாள்வதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன்பிடித்துறைக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடந்தமுறையைவிட இம்முறை எல்லா விடயங்களுக்கும் உரிய வகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கைஎடுத்துவருகின்றோம். இதற்குரிய ஒதுக்கீடும் உள்ளது.

மயிலிட்டி உட்பட வடக்கிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள்மேம்படுத்தப்படும். கடலறிப்பை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையைச் சூழ கடல் வளம் உள்ளது. அப்படி இருக்கையில் கடந்த காலங்களில் வெளிநாடுகளில் இருந்தே ரின் மீன் இறக்குமதி செய்யும்நிலை காணப்பட்டது. இதற்கு நாம் கடந்த வருடம் முற்றுப்புள்ளி வைத்தோம். தற்போது இலங்கையிலேயே ரின் மீன் உற்பத்தி செய்யப்படுகின்றது.

கருவாடு மற்றும் மாசி உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்குத்தேவையானஏற்பாடுகள் செய்து தரப்படும். கடந்த காலங்களில் இவர்களுக்கு உப்பு பிரச்சினை இருந்தது. அது தற்போது அது சரிசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்றொழில் அமைச்சால் இலங்கையில் பிரமாண்ட கண்காட்சி கடந்த வாரம் நடத்தப்பட்டது. எமது நாட்டின் மகத்துவம்இதன்மூலம்எடுத்துரைக்கப்பட்டது. சர்வதேசத்தின் கவனமும் ஈர்க்கப்பட்டது.

மீனவர்களின் பிரச்சினைகள் எமக்கு தெரியும். அவற்றை தீர்ப்பதற்குரிய உரிய தலையீடுகளை நாம் மேற்கொள்வோம். மீனவ கிராமங்களுக்கே நேரில் சென்று நாம் தீர்வுகளை வழங்கி வருகின்றோம் - என்றார்.

## தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தை 2009 ஆம் ஆண்டுக்கு முதலும் அதற்குப் பிறகும் மிக மோசமாக விமர்சித்து கேவலப்படுத்திய தரப்புகளிலே இன்று ஆட்சியிலே அமர்ந்திருக்கக்கூடிய ஜேவிபி முதன்மையானது.

மகிந்த ராஜபக்ச தரப்பு இனவாதம் பேசிய பொழுது இந்த தமிழினத்துக்கு எதிராக தேசிய தலைவருடையதலைமையத்துவத்திலேநடந்து கொண்டிருந்த விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு, ஒருஇனஅழிப்புக்குதத்துவார்த்த ரீதியாகத்துணையாக இருந்ததுதான் ஜேவிபி..

அப்படி இருக்கவும் இன்றைக்கு வடகிழக்கிலே அந்த தேசிய தலைவருடைய தலைமைத்துவத்துக்கு கீழே இயங்கிய போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் அங்கு இருக்கக்கூடிய மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக வட கிழக்கு தமிழ் மக்களுக்குக் காட்டுவதுடன் தெற்கிலே அதற்கு நேர்மாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றது ஜேவிபி. அத்தகைய ஒரு சூழலே இன்றைக்குக் காணப்படுகின்றது.

இதிலே பிரதானமாக செயல்படுவதில் கடற்றொழில் அமைச்சர் முக்கியமானவர். ஏனென்றால் தியாகதீபம் திலீபன் அவர்களுடைய நினைவு நிகழ்வுக்கு அவர் நேரடியாகச் சென்றார். ஜேவிபி போன்ற தமிழ் தேச விரோதக் கொள்கையுடைய நபர்கள் இன்றைக்கு அந்த தேசிய தலைவருடைய போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிறகு அதே தேசிய தலைவரையும் அவருடைய மாவீரர்களையும் அந்த இயக்கத்தையும் பற்றிப் பேசி, அதைத் தூக்கி பிடிக்காமல் வடகிழக்கில் நுழைய முடியாது.

அதனால் எந்தளவு தூரத்திற்கு தமிழ் தேச விரோத தத்துவங்களை கொண்ட தரப்புகள் தோல்விஅடைந்திருக்கின்றனஎன்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

(100)

## கடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயல்பட்டு வருகின்றது.

சுகாதார சேவைகள் தேவைப்படுவோர் அருகிலுள்ள மருத்துவமனைகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை நிலவிவருகின்றமையால்தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர்தேங்கியுள்ளது. இதனால்மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

(100)

## ராஜபக்சவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சும்ஒன்றுஎன்பதை கூறியாக வேண்டும். எனவே, அத்துறை தொடர்பில் உரிய வகையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2026 ஆம்நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் எமது அமைச்சுக்கு போதுமானளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசுத்தலைவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாடு மக்களின் புரத உணவுத் தேவையை நாம் பூர்த்தி செய்துகொடுக்கவேண்டும். அந்நியச் செலாவணியைக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகளையும் வலுப்படுத்த வேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

எமது அமைச்சுக்கு 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் 10.6 பில்லியன்ரூபாஒதுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல கடந்த காலங்களில் இலங்கை கடற்றொழில் கூட்டு தாபனத்திலும் கைவைத்தனர். கடந்த காலங்களில் நாசமாக்கப்பட்ட எமது அமைச்சுசார் 10 நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2000 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் மீன்பிடி அமைச்சுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது எமது அமைச்சுக்கு மட்டும் 2026 வரவு- செலவுத் திட்டத்தில் 15 பில்லியனுக்கும் மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் இம்முறையே இவ்வாறு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறையில் கடந்த காலங்களில் பல்வேறுபிரச்சினைகள்தோற்றுவிக்கப்பட்டிருந்தன. அந்தச் சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. வடக்கிலும், கிழக்கிலும் மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எமது ஆட்சியில் மண்ணெண்ணெய் விலை குறைக்கப்பட்டது. ஆனால் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் மீனவர்கள் கொலை என்பன தமது தந்தையின் (ராஜபக்ச) ஆட்சியில்தான் நடந்தன என்பதை மறந்து இங்கு சிலர் பேசுகின்றனர் - என்றார்.


JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## மாவீரர் நாளின் ஆழம் உணர்ந்து செயற்படுவோம்

தமிழ் சமூகத்தின் அரசியல் மற்றும் உணர்வியல் வரலாற்றில் ஆழமாகப் பதிந்த நாளாக மாவீரர் நாள் ஒவ்வோர் ஆண்டும் வரும்போது, நம்முடைய நினைவுகளின் கண்ணாடியில் பல உண்மைகள் பிரதிபலிக்கின்றன. ஆயிரக்கணக்கான இளம் உயிர்கள் தமிழ் மக்களின் உரிமை, பாதுகாப்பு, அரசியல் தனி நாட்டுக்கான கோரிக்கைகள் ஆகியவற்றை முன்னிறுத்தி இழக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தங்கள் வாழ்வை இனத்தின் விடிவிற்காக முன்வந்து அர்ப்பணித்தார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த பாதையைப் பற்றி அரசியல், சமூக, வரலாற்று கோணங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், உயிர் தியாகத்தை, தங்களுக்குச் சரியானதெனத் தோன்றிய தீர்வு ஒன்றுக்கா முன்வைத்த அவர்களின் நேர்மையைத் தூய்மையை கேள்விக்குட்படுத்த முடியாது. அதேநேரம் அத்தகைய தியாகத்தை 'அரசியல் மூலதனமாக' மாற்றும் எந்த முயற்சியும் அந்த உயிர்களின் மரியாதையைத் தகர்க்கும் செயல் என்ற உண்மையை நாம் மீண்டும் நினைவுகூர வேண்டும்.

இன்றைய சூழலில், அரசியல் கட்சிகள் ஒவ்வொருவரும் தங்களை மாவீரர்களின் தியாகத்தின் உண்மையான வாரிசுகளாக காட்டிக்கொள்ளப் போட்டியிடுகின்றனர். சில கட்சிகள் அந்த உரிமை தமக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கொண்டாடும் அபத்தத்தையும் காண்கின்றோம். ஆனால், தமிழர் வாழ்வில் நடைமுறையிலான மாற்றம் எதுவும் தோன்றாமல், காலத்தால் சிதைந்த வாக்குறுதிகள் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன. மாவீரர்களின் பெயர், படங்கள், சின்னங்கள்'எதுவாக இருந்தாலும்'அவற்றை உணர்ச்சி தூண்டலுக்கான ஒரு அரசியல் கருவியாக்குவது தமிழ் சமூகத்தின் வருங்காலத்தையே பாதிக்கும் அபாயமாக மாறியுள்ளது.

### மரியாதை மற்றும் மௌனம் மிக முக்கியம்

மாவீரர்களின் தியாகம் ஒரு அரசியல் வாதத்தின் கருவியாக அல்ல; அது ஒரு சமூகம் அனுபவித்த உள் வேதனையின், உரிமைப் போராட்டத்தின் சின்னமாகும். அந்த நாளை நினைவுகூர்வதில் உண்மை இருக்கவேண்டும். உணர்வுத் தூய்மை இருக்கவேண்டும். அதை அரசியல் சந்தைப்படுத்தலுக்கான மேடை ஆக்குவது முற்றிலும் வேறுபட்ட செயல்.

மாவீர்கள் தங்கள் உயிரை தந்தது, ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது தலைவருக்காக அல்ல–தமிழ் மக்களின் உரிமை மற்றும் வாழ்வுக்காகவே. எனவே, அந்த நினைவேந்தல்கள் அரசியல் கணக்கீடுகளில் சிக்கக்கூடாது.

பரிதாபமாக, இன்று பல அரசியல் நடிகர்கள் மாவீரர் நினைவைத் தங்களின் பக்கச்சார்பான அரசியல் நிலைப்பாடுகளுக்கான சான்றாக பயன்படுத்துகின்றனர். இது வரலாற்றை வளைத்து வாசிப்பதற்கு ஒப்பானது.

### அரசியல் நிழல்களில் சிக்கிய தமிழ் மக்கள்

போர் முடிந்து 15 ஆண்டுகளைக் கடந்தும் இன்றும்கூட, தமிழ் மக்களின் வாழ்க்கையில் எந்த அடிப்படை மாற்றமும் இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் நிலப்பரப்புகளின் பிரச்சினைகள் தொடர்கின்றன, காணாமலாக்கப்பட்டோர் குறித்த விடைகள் இன்னும் கிடைக்கவில்லை, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்ந்தும் கேள்வியாகவே இருக்கின்றது, பொருளாதாரச் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது, வடக்கு–கிழக்கில் அபிவிருத்தி சமமான முறையில் நடைபெறவில்லை, சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்திற்கு மத்தியில் தாமும் சமமாக வாழ்வதற்கான அரசியல் தீரவொன்றை ' குறைந்தபட்டச அதிகாரப் பகிர்வைக்கூட ' பெறமுடியவில்லை என்பதே இன்றுள்ள நிலை. இன்னும் சொல்லப் போனால் ஒரு அரசியல் தீர்வு கிடைக்குமா இல்லையா என்பதே நிச்சயமற்ற நிலையில்தான் இருக்கிறது என்கிற அவலம்.

இவற்றைக் களைவதற்கு உண்மையாக, நேர்மையாக, கட்சி அரசியலைத் தாண்டி முயற்சிக்க வேண்டியதே இன்று அரசியல் கட்சிகளின் உண்மையான கடமை. ஆனால், மாவீரர்களின் தியாகத்தை அரசியல் பேச்சின் மையமாக்கி மக்களின் உண்மையான தேவைகள் நிறைவேறாவிட்டாலும் பரவாயில்லை தமது கட்சி அரசியல் மட்டுமே செழித்தால் சிறந்தது என்கிற ரீதியில் அரசியல் நடத்தும் பண்பே தமிழ் அரசியல் கட்சிகளிடம் வலுத்து வருகிறது. இந்த நிலை மாறாமல் தொடர்வது மாவீரர்களுக்குச் செய்யும் துரோகம்.

### அரசியல் பிளவுகள் கடக்கப்படவேண்டும்

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையான ஒற்றுமையின்மை ஒருபோதும் முடிவடையும் பிரச்சினையாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு கட்சியும் தம்மை முதன்மை சக்தியாக்கிக் கொள்வதற்கு முட்டி; மோதிக் கொள்கின்றனவே தவிர, அரசியல் நேர்மையுடன் மக்களின் பிரச்சினைகளை அணுக முயலவில்லை..

இன்றைய நிலைமையைப் பார்க்கும் போது, தமிழர் எதிர்கொள்ளும் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை உடனடியாகத் தீர்க்கக்கூடிய நடைமுறை முயற்சி இடைக்கால அரசியல் தீர்வு (Interim Political Arrangement) தான். நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கான காலம் தாமதப்படும் என்று நிச்சயமாகத் தெரிகிறது. தற்போதைய ஆளும்தரப்பு மாகாண சபைகளையும் நிராகரிக்கும் நிலையில், பேச்சுக்கள் ஊடாக இடைக்காலத் தீர்வு ஒன்றையாவது அடைவதற்கான முயற்சிகள் அவசியமாகின்றன.

வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு விரிவான நிர்வாக அதிகாரங்கள், நில நிர்வாகம், காவல்துறை, வளங்கள் மேலாண்மை ஆகிய துறைகளில் பகுதியளவு தன்னாட்சி, அபிவிருத்தி நிதி நேரடியாக மாகாணங்களுக்கு வழங்கப்படும் ஒரு அமைப்பு, தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்ட, நிர்வாகக் கட்டமைப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்த இடைக்கால நிர்வாக முறைமை ஒன்றை ஆளும்தரப்புடன் பேசிப் பெறுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையில் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது சிறந்தது.

இதனை எட்ட அரசியல் கட்சிகள் புரிந்துணர்வோடு இணைந்து செயல்படுதல் கட்டாயமாகிறது. மாவீரர்களின் உயிர் தியாகத்திற்கான குறைந்தபட்ச மரியாதை என்றால் அது அவர்களின் உச்ச இலக்கை அடையாளவிட்டாலும் அதனோடு தொடர்புடைய ஒரு நடைமுறை முன்னேற்றம் தான்.

### தேவை பேச்சால் அல்ல, செயலால்

மாவீரர்களின் பெயரில் ஆண்டுதோறும் நிகழ்ச்சிகள் நடத்தலாம்; உரைகள் நிகழ்த்தலாம்; மலர்வீசலாம். ஆனால் அதனால் அவர்களின் இலக்குகள் எதுவும் நிறைவேறப் போவதில்லை.

அரசியல் கட்சிகள் உண்மையான அரசியல் சாதனைகளால் மட்டுமே அந்த தியாகத்திற்கு ஒரு நியாயம் சேர்க்க முடியும்.

மாவீரர் நாள் தமிழர் வரலாற்றின் மிக ஆழமான நினைவாக இருக்கிறது. அந்த நினைவை அரசியலாக்குவதால் அது கறைபடுகிறது; அதன் மதிப்பு விலைகுலைகிறது. இதைப் புரிந்து, உணர்ந்து செயற்படுவது தமிழ் கட்சிகளின் தலையாய கடமையாகின்றது.

## நுவரெலியா - கம்பொல வீதி நேற்று முதல் மூடப்பட்டது

நுவரெலியா–கம்பொல பிரதான வீதியில் பல பெரிய பாறைகள் விழும் அபாயம் இருப்பதால், நேற்றுப் பிற்பகல் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொத்மலை, கரடி எல்ல பகுதியில் பெய்து வரும் கனமழையால், கரடி எல்ல பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டத்திலிருந்து பல பெரிய பாறைகள் விழுந்து தேயிலைத் தோட்டத்தில் கிடக்கின்றன என்று கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர். இந்தப் பாறைகள் பிரதான வீதியில் விழும் அபாயம் இருப்பதால், வீதியின் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மூடப்பட்ட வீதி மீண்டும் திறக்கப்படும் வரை, வாகன ஓட்டிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு கொத்மலை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப்பொருட்களுடன் நேற்றும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் தொடர்ந்து நடத்திவரும் இத்தகைய கைதுகளின் தொடர்ச்சியாக இந்தக் கைதும் இடம்பெற்றது.

ஹெரோயின் போதைப்பொருட்களுடன் நான்கு ஆண்களும் கேரள கஞ்சா போதைப்பொருளுடன் ஒரு பெண்ணும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மில்லிகிராம் மற்றும் கிராம் அளவில் மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பில் சந்தேகநபர்களிடம் விசாரணை நடத்திய பின்னர் இவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நெடுந்தீவிலிருந்து நேற்று பறந்து வந்த விடைத்தாள்கள்

நெடுந்தீவில் நேற்று இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டன.

தினமும் பரீட்சை நிறவடைந்ததும் கடற்படைப் படகு மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற விடைத்தாள் நேற்று ஹெலியில் எடுத்து வரப்பட்டன. மழை காரணமாக கடலில் அதிக கொந்தளிப்புக் காணப்பட்டதால் விடைத்தாள்களை படகு மூலம் எடுத்துவர முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு மகா வித்தியாலத்தில் க. பொ.த உயர்தர பரீட்சை இடம்பெற்று வருகின்றது. பாடசாலை மைதானத்தில் ஹெலி தரையிறக்கப்பட்டு விடைத்தாள் எடுத்து வரப்பட்டன.

## அவசர உதவி தொலைபேசி எண் யாழ். மாவட்டத்தில் அறிவிப்பு

வெள்ளம் மற்றும் இயற்கை இடரினால் பாதிக்கப்படும் பொதுமக்கள் அவசர உதவிகளைப் பெற்றுக்கொள்ள 0212117117 என்ற தொலைபேசி எண் மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார்.

இடர் அபாய குறைப்பு நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக பிரதேச செயலக இடர் நிவாரண சேவைகள் பணியாளர்களுடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பிரதீபன் நேற்று நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அவசர உதவி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.


இடர் ஏற்படும்போது பணியாளர்கள் தமது கடமையிலிருந்து விலகமுடியாது எனவும், அடுத்த ஆண்டு தை மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரை கிராம மட்ட ரீதியாக எடுக்க வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகளுக்கான திட்டங்களை சமர்ப்பிக்குமாறும் கூட்டத்தில் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

வெள்ள நீர் வழிந்தோடாதுள்ள இடங்களின் விவரங்களைக் கேட்டறிந்த பின்னர் அங்கு தண்ணீர் வழிந்தோட முடியாதுள்ள தடைகளை ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றுவதற்கான முயற்சிய எடுத்தார். இடர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முதற்கட்டமாக 0.75 மில்லியன் ரூபா நிதியினை வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தார். அந்த நிதி உடனடியாக விடுவிக்கப்படுவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்படும் மக்களுக்கு உணவுப் பொதிகள், தறப்பாள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கும் போது பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பில் வழங்கப்படவேண்டும் எனவும் உத்தரவிட்டார். 0212117117 இலக்க தொலைபேசிக்கு 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவ் இலக்கத்திற்கு இடர்முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் பதிலளிப்பார் எனவும் அவர் பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அந்த அழைப்பு வரக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கலந்து கெ ண்டு கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினருமான கபிலன், பொதுமக்களிடமிருந்து வடிகால்கள் சீர் செய்யவேண்டிய கோரிக்கைகள் அதிகம் கிடைக்கப்பெறுகின்றன எனவும், வெள்ளம் ஏற்பட்டால் உதவி செய்வதற்கு முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## இன்று நயினா தீவுக்கான படகுச் சேவை நிறுத்தம்



சீரற்ற காலநிலை காரணமாக இன்று நயினாதீவு குறிகட்டுவான் படகு சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு -குறிகட்டுவான் இடையிலான தனியார் படகுச் சேவை இன்று சீரற்ற காலநிலை காரணமாக சேவையில் ஈடுபாடமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இவ் அறிவித்தலை பின்பற்றும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றனர் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
0777 43 55 57


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## தம்பலகாமத்தில்

# மழை வெள்ளத்தால் மாணவர்கள் சிரமம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயல பிரிவிற்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பாதிமா பாலிகா வித்தியாலயத்துக்கு செல்லும் வீதியானது கனமழை காரணமாக மூழ்கியதால் இன்று (26)பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

குறித்த பாடசாலைக்கு செல்லும் வீதியானது நீரினால் மூழ்கடிக்கப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் மழையையும் வெள்ள நீரையும் பாராது குறித்த வீதி ஊடாக நீரில் நனைந்தபடியே பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பவேண்டியிருந்தது.

மேலும் கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியின் புதுக்குடியிருப்பு பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததுடன் மின்சார கம்பிகளும் அறுந்துள்ளன. இதனால் அந்தப் பகுதியூடான போக்குவரத்தும் சில மணி நேரம் தடைப்பட்டது.

பொலிஸாரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும் இணைந்து மரத்தை அகற்றியதை அடுத்து போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.





















காலைக்கதிர்
Kalaikkathir

# மட்டு. தாழ் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கின

(சக்திவேல்)

கிழக்கில் பெய்து வரும் கனமழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை, தென்எருவில் பற்றுப் பகுதிகளிலுள்ள தாழ்நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. வெள்ள நீரை வழிந்தோட வைக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையில் வெல்லாவெளி மண்டூர் பிரதான வீதியினை ஊடறுத்து வெள்ள நீர் பாய்வதனால் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் குருமன்வெளி மண்டூர் படகுப் பாதை சேவையையே அதிகளவிலானோர் பயன்படுத்துகின்றனர் பெரும் எண்ணிக்கையானவர்கள் உயிர் காப்பு அங்கிகள் இன்றியே தமது பயணத்தைத் தொடரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் வினோராஜ் அப்பகுதிக்குச் சென்று பலத்த காற்று வீசுவதன் காரணமாகவும் இடர்களைக் குறைத்து கொள்ளும் வகையிலும் பாதுகாப்பு அங்கி அணிந்து படகுப் பாதையில் பயணிக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வீடொன்றில் மீது தென்னைமரம் ஒன்று விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட, எருவில், குருமன்வெளி, பட்டிருப்பு, போன்ற கிராமங்களில் தாழ்நிலப் பகுதியிலில் வெள்ளநீர் வடிந்தோடக்கூடிய வகையில் தற்காலிக வடிகால் அமைக்கும் பணி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.















காலைக்கதிர்
Kalaikkathir

# அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து அடை மழை



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையினால்தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், வீதிகள் பலவும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றது. அத்தோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அட்டாளைச்சேனை, தைக்கா நகர், அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை, நாவிதன்வெளி, மருதமுனை, பெரியநீலாவணை போன்ற பிரதேசங்களும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள சில வீட்டுத் திட்டங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதனால் தாழ்நிலப் பிரதேசங்கள், வீடுகள், வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கக் கூடிய அபாயமும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
















# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2025இல் வெளியிடப்பெற்றது